

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (20.12.2025) திருநெல்வேலியில், அ.தி.மு.க.வைச் சார்ந்த இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பேரூர் கழகச் செயலாளர் கே.எம்.ஏ சீமான் மரைக்காயர், மாவட்ட கழக பிரதிநிதி எல். சீனி காதர் முகைதீன், மாவட்ட மீனவர் பிரிவு இணைச் செயலாளர் எம். அபுபக்கர், தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணை செயலாளர் கே.எம்.ஏ.எஸ். ஹமீது அப்துல் ரகுமான் மரைக்காயர் மற்றும் நிர்வாகிகள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், முன்னாள் அமைச்சரும், கழக இலக்கிய அணித் தலைவருமான அன்வர் ராஜா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2025) திருநெல்வேலி சுற்றுலா மாளிகையில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி விஜிலா சத்யானந்த் , அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் டாக்டர் ஜானகி ரத்னா ஷோன், மருமகன் சாமுவேல் ஆகியோருடன் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். உடன், அமைச்சர் கே.என்.நேரு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2025) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டியில் 461 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.



மதுரை கிழக்கு தொகுதி கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கொடிக்குளம் மற்றும் சிட்டம்பட்டி ஊராட்சி பகுதிகளில் கிராமம் கிராமமாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு அவர்களுடன் கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்தார். சுற்றுப்பயணத்தின் போது அனைத்து துறை அரசு அதிகாரிகள் மற்றும் ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### ஒட்டன்சத்திரம் தொகுதி – தொப்பம்பட்டியில்

# 461 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்கள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

ஒட்டன்சத்திரம், டிச. 22 –

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டியில் நடைபெற்ற விழாவில் வீட்டு மனை பட்டாக்களை வழங்கி உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்க ளும் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு பள்ளிக்கல்வித் துறை மற்றும் மருத்துவத்துறை ஆகிய இரண்டு துறைகளுக்கு அதிகளவில் நிதியொதுக்கீடு செய்து வருகிறார்கள். பல்வேறு துறைகள் இருந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறைமற்றும் மருத்துவத்துறை இரண்டு துறைகளும் இரண்டு கண்கள் ஆகும். மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில்படிக்கின்ற குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள். இத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நாடுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற அன்றைய தினமே நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணத் திட்டத்தை செயல்படுத்தினார்கள். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டம், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் (தமிழ் வழிக் கல்வி) படித்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 'புதுமைப் பெண்' திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், ஒரு குடும்பத்தில் பெற்றோரை இழந்த எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அவர்களுக்கு 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள் திட்டம், விபத்திற்கு உள்ளான நபர்களை அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சை பெற்றால் முதல் 48 மணி நேரத்திற்கு மருத்துவ செலவுத் தொகையாக ரூ.2.00 இலட்சம் வழங்கப்படும் நம்மைக் காக்கும் 48 திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள்.

மேலும், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 51 ஆயிரம் பயனாளிகள் முதற்கட்டமாக வழங்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள வருகிறார்கள். இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்

2ஆவது கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 10 ஆயிரம் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டது தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக உருவாக்க கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் 8 இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, 2 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 1 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்ப ட்டுள்ளது. இன்று புஷ்பத்தூர் ராஜாம்பட்டி சத்திரப்பட்டி பகுதிகளைச் சேர்ந்த 461 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கிடைப்பதற்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு நிறைவே ற்றபட்டுள்ளது. விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது. மேலும், அம்பிளிக்கையில் பெண்கள் மட்டும் படிக்கும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இந்தக்கல்லூரி மாணவிகளுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவு பழனி திருக்கோயில் சார்பில் வழங்கப்படுகிறது. இந்தக் கல்லூரிக்கு ஒட்டன்சத்திரத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. படித்து முடித்த மாணவ, மாணவிகள் போட்டித் தேர்வில் வெற்றி பெற காளாஞ்சிப்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் குளிர்சாதன வசதியுடன் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் பல்வேறு போட்டி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், பழனி வருவாய் கோட்டாட்சியர் இரா.கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர்கள் சஞ்சை காந்தி, பிரசன்னா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபு பாண்டியன், தாஹிரா, குமரன் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, தர்மராஜ், பொன்ராஜ், முன்னாள்மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி, கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, கீரனூர் பேரூராட்சி துணைத் தலைவர் ஹாஜிஅப்துல் சுக்கூர், உள்ளிட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் – குறிஞ்சிப்பாடி, வடலூரில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்!

*கடலூர், டிச. 21 -*

*குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி, வடலூர் நகராட்சி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி வார்டு பகுதிகளில் தமிழகம் தலைகுனியாது " என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பரப்புரை கூட்டம் நடைப் பெற்றது.*

*தமிழ்நாடு முதலமை ச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் குறிஞ்சிப் பாடி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி 7வது வார்டு பாகம் எண் 165, வடலூர் நகராட்சி பாகம் எண் 186 மற்றும் 195ல் "தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி" பரப்புரை நடைப் பெற்றது.*

*வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை தாங்கி, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்கினார். தொகுதி பொறுப்பாளர் அங்கயற்கண்ணி முன்னிலை வகித்தார்.*

*இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார், நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், நகரமன்ற தலைவர் சுசிவக் குமார், துணை தலைவர் சுப்புராயலு, பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ஆர். ராமர், பேரூர் கழக செயலாளர் கே.வி.பி.சங்கர், துணை செயலாளர் விடுதலை சேகர், மாவட்ட பிரதிநிதி குமார், நகரமன்ற உறுப்பினர்கள் விஜய ராகவன்,சுமதி ஆனந்த்*

*உடன் கழக தொகுதி பார்வையாளர், ஒன்றிய, பேரூர், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் ,மாவட்ட கழக தொகுதி பொறுப்பாளர், பகுதி கழக முன்னோடிகள், பாக நிலை முகவர், பாக நிலைக் குழுவினர், பூத் டிஜிட்டல் ஏஜென்ட், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



இராணிப்பேட்டைமாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் கல்லூரி சேர்க்கை பெற்ற பெற்றோர் இல்லாத 5 மாணாக்கர்களுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி மடிக்கணினி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) கிளாடி சுகுணா உள்ளனர்.



மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (தொழில் துறை) சார்பில் 9.60 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 314.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டுமான பணிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி,மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் மதுரை பாலா ஆகியோர் உடன் உள்ளனர்.